முருகன் டாக்கீஸ்'

ரத்னகுமார்

T. R. Ramachary.
24.12.49

MURUGAN TALKIE FILM CO, MADURA

Branches:- BANGALORE & BEZWADA

முருகன் டாக்கீஸ் தயாரித்த

"ரத்னகுமார்"

டைரக்ஷன்	...	கிருஷ்ணன்பஞ்சு
உதவி டைரக்ஷன்	...	A. பீம்சிங்

படப்பிடிப்பு (நிர்வாகம்)	...	ஜித்தன் பானர்ஜி
படப்பிடிப்பு	...	செல்வராஜ்
ஒலிப் பதிவு (நிர்வாகம்)	...	தின்ஷா K. தெஹ்ரானி
ஒலிப் பதிவு	...	விமலன்
செட்டிங்ஸ்	...	F. நாகூர்
மேக் அப்	...	ஹரிபாபு
எடிட்டிங்	...	S. பஞ்சாபி

வசனம்	...	P. P. வேலாயுதம்
பாடல்கள்	...	பாபநாசம் சிவன் சுரபி
சங்கீதம்	...	G. ராமநாதன் C. R. சுப்புராமன்
நடனம்	...	ராகவய்யா சத்தியம்

ரத்னகுமார்

நடிகர்கள்

P. U. சின்னப்பா	...	ரத்னகுமார்
D. பாலசுப்ரமண்யம்	...	நரேந்திர வர்மன்
M. G. ராமசந்தர்	...	பலதேவன்
N. S. கிருஷ்ணன்	...	ஜீவானந்தன்
K. P. கேசவன்	...	துர்ஜயன்
நாகர்கோவில் மகாதேவன்	...	சாது
T. S. துரைராஜ்	...	குருமூர்த்தி
பொன்னுசாமிபிள்ளை	...	பொன்னுசாமிபிள்ளை
ராதாகிருஷ்ணன், துரைபாண்டியன்	...	சேவகர்கள்

நடிகைகள்

P. பானுமதி	...	மாலதி
K. மாலதி	...	திலகவதி
T. A. மதுரம்	...	நந்தினி
பார்வதி	...	மிருணாளினி

ரத்னகுமார்

கதைச்சுருக்கம்

"அரசன் ஆண்டியாவனே! ஆண்டி மணி முடி பூண்பனே". இதை விளக்குவதே இக்கதை.

இரத்னபுரியில் அன்னை மாகாலட்சுமியின் ஆலயத்திலிருந்து துதி பாடி விட்டு, ரத்னகுமார் என்ற ஒரு பிச்சைக்காரன் அன்று முழுதும் அலைந்தும் ஒன்றுமே கிடைக்காமல் கடைசியில் ஒரு பாழடைந்த சத்திரத்தில் போய்ப் படுத்துக் கொள்ளுகிறான். இரவிலே பேய்களின் அட்டகாசத்தையும் "போடட்டுமா" என்ற சத்தத்தையும் கேட்டு பயந்து, வெளியே ஓடிச் சென்று அருகிலிருந்த ஒரு குடிசைக்குள் போய் பதுங்கிக் கொள்ளுகிறான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் குடிசையின் சொந்தக்காரியான பிச்சைக்காரி மாலதியைச் சந்திக்கிறான். மறு நாள் முதல் இருவரும் சேர்ந்து ஆடிப் பாடிப் பிச்சை யெடுத்து நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள். ரத்னகுமாருக்குத் தன்னிடமுள்ள காதல் உண்மையானதா என்று சோதித்தறிந்த பின்னர், மாலதி அவனுக்குக் கழுத்தை வளைந்து கொடுக்கிறாள். உயிரே போனாலும் கைவிடக் கூடாது என்ற உபதேசத்துடன், பால்ய வயதிலே தன் வளர்ப்புத் தந்தையால் தனக்களிக்கப்பட்ட ஒரு உன்னதமான பதக்கத்தை, ரத்னகுமார், நித்தமும் அவள் வணங்கிவரும் தேவியின் முன்னிலையில் அவளுக்குத் திருமாங்கல்யமாகக் கட்டுகிறான்.

தன்னுடைய ஒரே புதல்வன் ஈராண்டுப் பிராயத்தே காணமற் போய்விட்டதால், இரத்னபுரி மன்னன் நரேந்திர வர்மன், தன் தங்கை மகள் திலகவதி தேவிக்கு இளவரசிப்

பட்டம் சூட்டிவைக்கிறான். அதை முன்னிட்டு ரத்னகுமாரும் மாலதியும் அரண்மனையில் வந்து ஆடிப்பாடுகிறார்கள். சேனாதிபதி பலதேவனும் துர்ஜயனும் கவனிப்பதையும பாராமல், தன் இன்னிசையால் அங்கு இழுத்து வரப்பட்ட திலகவதியைக் கண்டு மோகித்து நின்ற ரத்னகுமாரை, இழுத்துச் செல்கிறாள் மாலதி. சாப்பிட அழைக்கிறாள். ஆனால் ரத்னகுமார், இன்னொரு முறை இளவரசியைக் காண விரைகிறான். அரண்மனைச் சுவரேறிக் குதிக்கையில் ரத்னகுமார், சிப்பாய்களால் பிடிக்கப்பட்டு பலதேவ துர்ஜயர்களின் கட்டளைப்படி அடிக்கப்பட்டு, போட்டுமாச் சத்திரத்தில் கொண்டு தள்ளப்படுகிறான். கணவன் அடிபட்ட செய்தி கேட்ட மாலதி ஓடோடியும் சென்று அவனைக் காணாது திரும்பி வந்து தேவியின் பாதங்களில் விழுந்து புலம்புகிறாள். தன் பக்தைக்காக தேவி, சத்திரத்தில் தோன்றி மோகினிகளால் காப்பாற்றப்பட்டு வந்த அஷ்ட ஐச்வரியங்களையும் ரத்னகுமாருக்களித்து, அதைக் காத்து வந்த நாகசர்ப்பத்தின் மாணிக்கத்தை ஒரு மோதிரமாக்கி அவன் விரலில் அணிந்து மறைகிறாள். உடனே அவன் பிச்சைக்கார உடைகள் பணக்கார உடைகளாகமாறுகிறது. சத்திரமும் பெரிய மாளிகையாக மாறுகிறது. தான் அவனுடைய விரலில் இருக்கும் வரையிலும் அவனுக்கு ஒரு வித ஆபத்தும் இல்லை என்று சொல்லி, அவன் தூய உள்ளத்தில் செல்வச் செருக்கைத் தூவுகிறது அந்த மாயாமோதிரம்.

ரத்னகுமார், அரசகாணிக்கையாக ஒரு அற்புதமான கிரீடத்தை அரசருக்கு அனுப்பிவிட்டு, தானும் தர்பாருக்குச் செல்கிறான். அங்கு தலைவணங்காது நின்ற மன்னனின் மணிமகுடத்தைத் தட்டி வீழ்த்துகிறான். தப்ப முடியாதென்றறிந்ததும், மோதிரத்தைப் பார்க்க, அந்த மாயா மோதிரத்தின் சக்தியால், கீழேகிடந்த கிரீடத்திலிருந்து ஒரு சர்ப்பம் வெளியேற, அதுகண்ட மன்னன், தன் உயிரைக் காக்கவே ரத்னகுமார் அவ்வாறுசெய்ததாக எண்ணி அவனைப் பாராட்டுகிறான். ஆனால் பலதேவனும் துர்ஜயனும் மட்டும் சந்தேகிக்கின்றனர். ரத்னகுமாரும் திலகவதியும் கண்ணால் பேசிக்கொள்ளுகிறார்கள்.

கணவன் பணக்காரனாயிருப்பதை ஒரு சாதுவினிடமிருந்து கேள்விப்பட்டு, மாலதி அவனைக் காண ஆவலுடன் செல்கிறாள். ஆனால் புதுப்பணத்தில் புரளும் ரத்னகுமார், அடாத மொழிகளை அள்ளி வீசி அவளை அடித்துத் துரத்திவிடுகிறான்.

ஒரு நாள் ரத்னகுமார் ஒரு நவரத்னமாலையுடன் அந்தப் புரத்துக்குச் சென்று இளவரசியுடன் சரச சல்லாபமாடி அவளைத் தொட்டுத் தூக்கும் போது, பலதேவன் அரசனையும் துர்ஜயனையும் அழைத்து வந்து காட்ட, மாயாமோதிரத்தின் சக்தியால் மேலே தொங்கிக் கொண்டிருந்த பெரிய லஸ்தர் விளக்கு அறுந்து விழுகிறது. இம்முறை இளவரசியின் உயிரைக்காக்கவே ரத்னகுமார் அவளைத் தொட்டுத் தூக்கியதாக எண்ணி அரசர் அவனை மேலும் பாராட்டுகிருர்.

சந்தேகம் வலுத்த பலதேவனும், துர்ஜயனும், ரத்னகுமார் யார் என்பதைச் சிந்தித்தறிந்து, மாலதியை இழுத்துக் கொண்டு வந்து, மிரட்டி, உண்மையைத் தெரிந்து கொள்ளுகிருர்கள்.

ஓர் இரவு கள்ளக் காதலர்கள் அரண்மனைப் பூங்காவில் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது, திலகவதி ரத்னகுமார் மார்பில் உறங்கி விடுகிருள். அப்போது அங்கு ஒரு நாகசர்ப்பம் தங்களை நோக்கி வருவதைக் கண்ட ரத்னகுமார், தன் கையால் பிடித்துக் கொன்றெறிந்து விட்டு, ரத்தக் கறை படிந்த கரத்தை நீர் வீழ்ச்சியில் கழுவ, மாயாமோதிரம் விரலைவிட்டுக் கழன்று விழுந்து உருண்டோடி மறைகிறது. உடனே அவன் உடைகள் பிச்சைக்கார உடைகளாக மாறுகிறது. (மாளிகை பழைய சத்திரமாக மாறுகிறது.) திடீர் மாறுதலைக் கண்டு திலகவதியும் ரத்னகுமாரும் திகைத்து நிற்கும்போது, அங்கு மன்னனுடன் தோன்றுகிருர்கள் பலதேவனும், துர்ஜயனும்.

ரத்னகுமாரின் முடிவு ? ? ?
மாலதியின் கதி ? ? ?
திலகவதியின் காதல் ? ? ?

இவைகளுக்கு பதில் வெள்ளித் திரையில் காண்க.

சுபம்

★

★ ★

ரத்னகுமார்

(பாட்டுகள்)

ரத்னகுமார் :

தொகையறு.

திருமாலின் கௌஸ்துபம்சேர் திருமார்பப் பெட்டகத்துள்
திகழ்ந்தாய்
பெருமாழி பெற்றெடுத்த பெண்ணரசி செங்கமலப் பீடம்
வாழ்ந்தாய்
உருமாறச் செய்யும் கொடிய வறுமையற நவநிதியும்
உளங்கனிந்து தரும்மாதா
உனையன்றி தாரணியில் எவர்தாயே தெய்வம் நீயே நீயே.

(பாட்டு.) [இராகம்—செஞ்சுருட்டி

உன்னருளால் உலகின்பமயம்
உன்னருளால் மனம் இன்பமிகும் செந்திரு (உன்)
உன்னருளால் மலர் மணமும் பெறுமே
உனதருளால் தென்றல் சுகம் தருமே அம்பா (உன்)
உன்னருளே நான் பாடுவதும்— கொண்டாடுவதும்
உனதருளே (என்) உள்ளம் நாடுவதும் கைகூடுவதும்
அம்பா (உன்)

சாது : [இராகம்—கமாஸ்.

பம்பரம் போலே சுழலுமிவ் வுலகம்
பார்த்து மனம் மருண்டு ஓடாதே (பம்)
ஆந்தையும் பேய்களும் அலறிடும் பாழிடம்
அலைமகள் இருப்பிடம் ஆகாதே
இச்சை கொண்டால் உலகேழையும் ஆழலாம்
பிச்சைக் கையேந்தி நிதம் நடந்தலையாதே ... ... (பம்)

ஜீவானந்தன் :

உன்னருளால் இந்த உடல் வளரும்
உந்தியப்பா என் தொந்தியப்பா (உன்)
பணமும் காசும் பருத்தவன் தெய்வம்
பருப்பும் சோறும் பசித்தவன் தெய்வம் (உன்)
தேவைக்குமேலே சேர்ப்பவன் திருடன்
தெய்வம் விதியென்று காய்பவன் குருடன் (உன்)

பல்லவி. இராகம்—பைரவி.

மாலதி :

நீ தயை புரிவாயே—நின்
பாதம் மறவேன் தாயே—அம்பா (நீ)

அநுபல்லவி.

மேதினியில் ஒரு பேதை அனாதை எனக்
காதாரம் வேறேது ஜெகன்மாதா (நீ)

சரணம்.

மாயா உலகில் நான் ஓர் விளையாட்டுப் பொம்மை
நீயே எனை அணைந்து தாலாட்டும் அம்மை
வாயாலெந் நேரமும் உன் புகழ் பாடி
மனமுனது மலரடி நினைந்திடவும் (நீ)

ரத்னகுமார் : (ஹிந்துஸ்தான்)

கனவான்களே வாங்கோ
கண்டு களித்துப் போங்கோ.

மாலதி :

நம் ஆட்டங்கள் பார்த்து மகிழ்ந்து
பணம் எடுத்துத் தாங்கோ (கன)

ரத்னகுமார் :

பாம்பை எடுத்ததை ஆட்டிடுவோம்—நல்ல

மாலதி :

பூ நாகமும் கொண் டாட்டிடுவோம்
செங்நிற நாகமும் காட்டிடுவோம்—செம்
பொன் னுடன் காசும் போடுங்கோ (கன)

ரத்னகுமார் சந்தம்.

வானுயர்ந்த பெரு வெள்ளி மா மலையில் வாழ்ந்
திருந்தோம் நாமே
அங்கு மானுடன் மழுவும் கொண்ட ஈசன் வரக் கண்டோ
துங்கி வந்தோம்
தேனும் பாலும் அபிஷேகம் கொள் பழநிஆண்டவன்
மலை சென்றோம்
அங்கு காணும் காவடியும் சங்கு நாதமும் அரகரா
எனும் ஒலியும்
காதைத் துளைக்கவே செந்தமிழகத்தியர் பொதியமலை
வந்தோம்.

ஓதிடும் பல கொடு நோய்கள்
ஓடிடும் படியே செய்யும்

பச்சிலை யுண்டு—வேர்களு முண்டு
வேண்டிய நல்ல—மருந்துகளுண்டு

மாலதி ;

உண்டு......உண்டு......உண்டு......உண்டு,

(இருவரும்:) வாங்கோ...ஆட்டம் பார்த்திட்டுப் போங்கோ.

ரத்னகுமார்: (ஹிந்துஸ்தான்)

அந்திநேரமே இன்பமே ஆனந்த மெல்லாம் பார்
பார்தனிலே
தென்றல் உலாவு மிந்த சோலையிலே
அதி அன்பாக ஆசையோடிவ் வேளையிலே
அதோ கொஞ்சிக் குலாவுதே கூடியே நல்ல ஜோடியே.
(அந்தி)

மாலதி :

ஹா......என்ன......எங்கே.

ரத்னகுமார் :

நாணமாகப் பேசும் புதுமணப் பெண்போல்
அரசுடன் வேம்பும் சரசம் கொண்டாடுதே... (நாண)
இணையில்லா வாழ்வு யிதே—காண்பதெப்போ
கண்மணியே.

மாலதி :

வீண் மனக் கோட்டை யெதும் வேண்டாமே போதும்.

ரத்னகுமார் :

வானுயர்ந்த ஆலமரம் பாரதோ
தன் விழுதாலது பலம் தேடுதே.

மாலதி :

என்னென்னமோ வீண் ஜாடையே—
ஏனோ இந்தச் சாலையிலே
ஏசிப்பலர் கேலி செய்வார்
பேசிப் பின்னாலே

சாது : இராகம்—சிம்மேந்திரமத்திமம்

தொகையறா.

காலை மலர் மாலையினில் வாடிப்போகும்
கட்டழகி கனியிதழும் துவண்டுபோகும்
காலமெல்லாம் வஸந்தமெனக் கனவு காண்பார்
கைத்தலத்தில் கனிவைத்துக் கலங்குவாரே.

பாட்டு.

வாழ்வின் கலசம் வரண்டிடு முன்னே
வாரியே பருகிடடா
சூழ்ந்திடும் தென்றல் காற்றுள்ளபோதே
தூற்றிட எழுந்திரடா.

மாலதி : இராகம்—சங்கராபரணம்.

கலைமாதும் அலைமாதும் இருபுறமும் அமர்ந்து தொழக்
கடைக்கண் நோக்கும் உலகீன்ற உனது இள நகைமுகம்
கண்டு
உள்ளம் ஆனந்த வெள்ளம் அலைமோத
தொட்டிலிட்டுத் தாலாட்டி உன் மழலை அமுத முண்ட
மலை ராஜன் செய்த மாதவம் புகழும் தரமோ மூவுலக மாதா!

(பாட்டு.)

இன்பங் கொடுப்பவள் நீ—நம்பினோர்
துன்பம் துடைப்பவள் நீ—அம்பா ... ... (இன்)
உன் பாரம் உன் அடியாள், பேதை எனக்கு
உன் பாதம் துணை யறிவாய் (இன்)

மாலதி : [ஹிந்துஸ்தான்]

ஜேய் ஜேய் ஜேய் ஹஹ ஹஹ
சொல்லரு மானந்தம் எனது
வாழ்வில் இன்றே துரையே
உள்ளம் இன்ப மிக உமை இன்றே ஒன்றாய்
அன்புடன் நான் கலந்தேன்

ஆஹா............ஆஹா...............
உண்மைக் காதல் நிறைந்திடும் நமது பிரேமை நகரில்
நீரே ராஜா (சொல்)

ரத்னகுமார் :

ராஜா ! எனக்குகந்த உயர் ராணி யார் ?

மாலதி :

நானே சம்மதந்தானோ ?

ரத்னகுமார் :

மந்த்ரி நீயே அதிகாரி நீயே அந்தரங்க மிருந்தவர்
வேறெவர்
தங்க மகுடமில்லையோ, ஓர் செங்கோல் வெண்குடை
தானில்லையோ

மாலதி :

சிங்காசனமேல் அமர்வீர் இன்று நான் புரிவேன்
அபிஷேகம்
செங்கோலிதைத் தாங்கும் வெண்குடை யாவும்
கொடுத்திடுவேனே
யானை சேனை பரிவாரமும் உண்டு வாரும் வாருமென்
கண் விருந்தே
ஆஹா............ஆஹா.........ஆஹா.........ஆஹா........

இருவரும் :

தேரிலேரியே இருவருமாய் ஊர்வலம் வருவோமே !
அமரர் லோகமும் இதற்கே நிகரோ

ரத்னகுமார் : இராகம்—ஆனந்தபைரவி.

தொகையரு.

உள்ள முருக்க வழி நடை பொய்கையிலே
உதித்து மலர்ந்த செந்தாமரை மலரோ
மெள்ள மனத்துள் புகுந்து கலஹஞ்செய்
காமன் கணையோ கள்ளிக் கான் நடுவே தழைத்து மணம்
வீசும் செந்தாளம்பூவோ என்றுனைக்கண்டு

பல்லவி.

ஆனந்த வெள்ளம் அமிழ்ந்து நீந்து தென்
அந்தரங்கம் அன்பே உனைக்கண்டு (ஆ)

அநுபல்லவி.

வானுலாவு மின்னோ நின் விழிகள் மதன் கணையோ
என்றே காணும் தோறும் (ஆ)

சரணம்.

மின்னல் கொடியே இங்குவா—கூடி
விளையாடுவோம் இங்குவா...வா...
அன்ன நடையோடிங்கு வா......வா......நெஞ்சை
அள்ளும் இள நகையே வா......வா
பார் மதி உலாவுமதன ரதியோ மனமே நாடிடுதே—
(பார்)

மாலதி :—மாது உன்னுசை விலாஸ ரதியும் அறிவீர்
மனது மாறிநேர்ந்த நினைவே
ரத்னகுமார் :—கரிய கண் ரெண்டும் பெரியவேல் கொண்டு
அருகில் வாவென்றழைத்திடுதே
மாலதி :—எழில் கண் பாரும் மான் விழி நானே
என்ன முகும் இன்பமிலையோ
ரத்னகுமார் :—புதிய நடை இடை பொற்கொடியோ
மாலதி :—மாது அன்னம் போல் பார் நடையே
ரத்னகுமார் :—முல்லையாம் அவள் பல் வரிசை
மாலதி :—முகர்ந்திடில் மலரும் வாடிடுமே
ரத்னகுமார் :—கனக மயிலோ

மாலதி :—மயிலழகி நான்
ரத்னகுமார் :—சுகமும் வருமே
மாலதி :—சுகமே தருவேன்
ரத்னகுமார் :—வருவாய்
மாலதி :—வருவேன்
ரத்னகுமார் :—துணை நீ
மாலதி :—துணை நான்

இருவரும் :
இன்பம் தங்கும் அன்பும் மதன சுகபோகம்
புவிதனிலே நாமும் இருவருமே கூட மகிழ்வுடனே (ஆ)

மாலதி : பல்லவி.

இராகம்—சுத்தசாவேரி.

வரட்டும் வந்தால் வழி சொல்லுவேன்—துஷ்ட
மனதை அடக்கும் உயர் வல்லமையற்ற அவர் (வர)

அநுபல்லவி.

குருட்டுத்தனத்தால் அவமானப் பட்டுத் திரும்பி
கொஞ்சிக் கெஞ்சி என்னிடம் வந்து குழைந்
தொரு முத்தம் கேட்க (வர)

சரணம்.

நாடாளும் ராணி அவள் எங்கே—சுத்த
நாடோடி யான இவ ரெங்கே
எட்டாப் பழத்துக்காக ஆசைப்பட்டு ஏமாந்து
தட்டுக் கெட்டுக் குட்டுப் பட்டு முடிவிலே
அவரென் எதிரிலே (வர)

ரத்னகுமார் : இராகம்—ஸ்ரீராகம்

பல்லவி

ஆஹா அதிசய மிதாமே உலகமறியாத
அதிசய மிதாமே

அநுபல்லவி

இறைவன் அற்புத லீலையின் பெருமை
எவ்விதம் புகழ்வேன்.

சரணம்

அரசன் ஆண்டி ஆவனே
ஆண்டி மணிமுடி பூண்பனே.
அவன் செயல் அரை நொடி தனிலே
அலை கடல் சுவருமே ... ...(இறை)
கனவிலும் நினையாத இன்பமது கைகூடும்
பரிதிமுன் பனி போலும் இன்னல்கள் பறந்தோடும்
இனியொருதுணை ஏதென ஏங்கி மனம் வாடும் பொழுது
இரங்கி அஞ்சேல் என்றருள் சுரந்து வந்தாள் நஞ்சணி
(இறை)

சாது : தொகையறு. இராகம்—கானடா.

பாரிதனில் இரவின்றிப் பகலு மில்லை
பசியின்றி நாவறிந்த ருசியுமில்லை
நேரவருந் துன்பமின்றேல் இன்ப முண்டோ
நெஞ்சமிதை மறந்துவிடில் தஞ்ச முண்டோ.

பாட்டு :

அன்றுன் தலையில் அவன் எழுதியதை இன்று
அழித்தே எழுதவும் முடிந்திடுமோ?
ஆருய்க் கண்ணீர் நீ சொரிந்தாலும்
அதிலோர் எழுத்தினை அழித்திடுமோ?

மாலதி : விருத்தம். இராகம்—கரகரப்பிரியா

விழுது விட்டுத் தழைத் தோங்கி விண்ணுயர வளர் ஆலே
வீணே உன்முன்
விருப்புடையார் போல் உறுதி புகன்ற அவர் நெறி
எங்கே விம்மி விம்மி
அழுதழுது கண்வீங்கு மென் முகம் பார் பேதை என்பால்
அன்பு மிக்க
அருந்துணையே! அரசினேடு இணை பிரியா வேம்பே!
உன் ஆசி எங்கே?

இராகம்—கேதார கௌளை.

பழுதில் திருமாங்கல்ய பதிவிது வென்றன் கழுத்தில்
பரிந்தணிந்த பதக்கமே!
அவ ரென்னைப் பிரிந்து சென்ருர் சிரிக்கின்ருய்
பரதையானேன்

இராகம் :—பூரி கல்யாணி

முழுது முனே நம்பினேன் உன் முன்னன்றே அவர்
உறுதி மொழிந்தார் தேவி !
முறை யிதுவோ—குறைவின்றி அவரேனும் வாழ்க
நான் மோஹந் தீர்ந்தேன்.

பாட்டு : (ஜோன்புரி)

ஆடவர் காதல் இதுதானே—என்—ஆவலுக்கு
இறுதி இதுதானே
அன்பெனும் பொய் வேஷம் இதுதானே—என்
அன்னையே உன் அருள் பரிசிதுதானே (ஆ)

திலகவதி : (ஹிந்துஸ்தான்)

ஏனடி கிளியே இந்த உல்லாஸம்—மான்போல்
துள்ளுதே எந்தன் மனந்தானே

கொஞ்சிக் கொஞ்சி உனேப்போலே
பேசிடவுந் தானே

ஆசை யெழுதே—ஓடிவா
பல பல பழந்தருவேனே
காணு மிட மெல்லாம் இன்பமாய்த் தோணுதே—
தாவித் தாவி எனே ஏதோ ஒருகரம் தழுவ வருகுதே.
ஆ.........ஆ.........
வாழ்வு மலரும் நாளிதோ
புதிதாய் ஒருமணம் எங்கும் வீசுதே—
மனதுடன் புத்தம் புதுமையாய்ப் பேசுதே
ஆசை தீர இன்று ஆடிப் பாடுவேன்
ஆரா அமுதமே நாடுவேன்.

ரத்னகுமார் :

மக ராஜர்களே தர்மமிகும் புண்யமுள்ளோரே
பெற்ற தாயின் மிக்கோரே எங்கள் தந்தையும் நீரே (ம)
மகா ராஸிகளே—காசிடுவீர் தர்மமுண்டு
குளிர் தாங்க இல்லோமே—பழந்துணி தருவீரே (ம)
எங்கள் நாடறியோம் குடியிருக்க வீடுமில்லோமே
வெயில் வாடும் இரண்டாத்மா இங்கு தேடி வந்தோமே
(நாட)

பாடுவதாலே பசி தீர்ந்திடுமோ
பரிவாய் எளியோர் முகமே பார்த்திடுவீரே (நாட)

திலகவதி :

நாம்—வாழ்வெனும் சோலையில் புகுந்தோமே
மயிலாய் ஆடுவமே குயிலாய்ப் பாடுவமே

ரத்னகுமார் :

நீ—இளமாமயிலாய் ஆடிடுவாய்—நான்
இசைவாய்ப் பதம் பாடிடுவேன்.

திலகவதி :

ஓடும் நதி நானே கடல் நீரே உமை நாடி வந்தேன்
ஊனுயிராய்க் கலந்தோமே இனியோர்
பேத முண்டோ.

ரத்னகுமார் :

உள்ளக் கடல் பொங்கியே ஓடி வந்தேன்—நானே
பள்ளமதில் பாயாத வெள்ளமுண்டோ.

திலகவதி :

ஆஹா மலரிதழை வண்டும் சுவைக்குதே
வாழ்வெலாம் இன்பமயம் தானே

ரத்னகுமார் :

மானே பாரிதோ யாரோ அணைக்குறார்
மதனும் ரதியுமென ஜோரா யிருக்கிறார்.

திலகவதி :—மயலினால்.

ரத்னகுமார் :—மதன் வில்லை வெல்லுவோம்.

திலகவதி :—மனதிலே.

ரத்னகுமார் :—ஒரு எல்லை இல்லையே.

இன்பக் கடலிடை மூழ்கி யெழுந்தே
எல்லைகள் காண்போமே
இதய வெளியிலே இறுதி யில்லாமல்
இணைந்தே வாழ்வோமே
வெண்மதி பொழியும் தன் நிலவதனில்
மிதந்து மகிழ் வோமே
மெய் மறந்து அணைவோமே.

ரத்னகுமார் : **பாட்டு.** இராகம்—செஞ்சுருட்டி.

கேலிமிகச் செய்வாள் கேட்டதெல்லாந் தான் தருவாள்
வேலைகளைச் செய்து கொண்டே வேடிக்கை காட்டிடுவாள்
ஏனடி நீ நேற்றிரவு ஏன் கோபம் கொண்டா யென்றால்
ஏரியிலே மீன் பிடித்தேன் பல் நோவு வந்த தென்பாள்
வீட்டிலே என்றைக்கும் ஓயாமல் உழைந்திடுவாள்
பாட்டிலே உள்ள மெல்லாம் பறிகொடுத்தேன்
பாரு மென்பாள்
கிட்டத்தில் வந்து நின்று ஒட்டி ஒட்டிப் பேசிடுவாள்
கிட்டி அணைந்திடிலோ எட்டி நின்று பேசு மென்பாள்
மாதவளால் கண்டசுகம் மிக உண்டு கண்டீர்
மாதர்களில்லாமலிந்த மானிலத்தில் வாழ்வு மில்லை
முன் வினையால் நானும் மனமுடைந்து வாடுகையில்
மாதவளைக் கண்டேன் மாலதி நான் என்றாள்

அசாவேரி :

கட்டழகுள்ள உடல் கண்ணிலே நல்ல குணம்
காணக் கண் கூசும் கருங் குழலாள்
ஒப்புயர் வற்ற ஒய்யார நடையுடனே
என்னைக்கண்டு காரணமும் கேட்டு ஊரும் பேரும்
ஒளியாமற் கூறுமென்றாள்.

கானடா.

பசியாறச் சோறில்லை படுத்துறங்க வீடில்லை
நசித்திடிந்த சத்திரத்தில் நான் போய் படுத்திருந்தேன்
நடு நிசியில் பேய்க்கூட்டம்—வரக்கண்டு பயந்து
ஓடினேன் ஓடி ஒளிந்தேன் அம்மம்மா உனைக்கண்டேன்
நான் உனைக் கண்டேன்.

பாட்டு

தாலி கட்டும் பெண்டாட்டி தங்கு தடை ஏது மில்லை
நானோர் அனாதை நாதி ஏது மில்லாதவன்
ஆன துயருக் களவில்லை ஆதரித்தால் போது மென்றேன்

சாரங்கா.

அன்றுமுதல் நாங்கள் அன்பாலிணைந்து விட்டோம்
நகரத்து வீதிகளில் ககனத்துக் கன்னிகை போல்
அவள் ஆடுவாள் நான் பாடுவேன்
அம்பிகை முன் நான் பல ஆணைகள் இட்டபின்னர்
நம்பிக்கை கொண்டாள் அந்த நாயகியை நான்
மணந்தேன்

பாட்டு

காணக் கிடைக்காத தங்கம்-அவள்
மாதவளை நான் பெறவே என்ன தவம் செய்து
விட்டேன் (கா)

செஞ்சுருட்டி.

இன்பமுடன் வாழ்கையிலே இளவரசிதனைக் கண்டு
என் மனம் பறிகொடுத்தேன் இன்னல்கள் பல நேருமென்று
இயம்பினாள், நீதிபல சொன்னாள், நியாயம் கேட்டாள்,
அழுதாள், புலம்பினாள், அடித்துத் துரத்திவிட்டேன்
என்னிரு கண்ணின் மணியாய் உதித்த மாமணியே
என் அன்பே, அமுதே, என் ஆசைப் பொக்கிஷமே,
பண்பே, பாரினில் பத்தினி ரத்தினமே,

இன்றுனைப் பிரிந்தேன்
இன்றுனைப் பிரிந்தேன்
இன்றுனைப் பிரிந்தேன் !

The All-India Printing Works, 65, Thambu Chetty Street, Madras. 1.

எமது

அடுத்தபடம்

It's MURUGAN

MADURA

வெற்றிகரமாக ஓடிக்
கொண்டிருக்கும்
எமது படங்கள்

1. நவீன சாரங்கதாரா
2. அசோக்குமார்
3. ரம்பையின் காதல்
4. பக்த துளசிதாஸ்
5. உஷா கல்யாணம்
6. தாராசசாங்கம்
7. பிரபாவதி
8. தெய்வநீதி

விவரங்களுக்கு:—

முருகன் டாக்கி பிலிம் Co.,

பெங்களூர் சிடி, மதுரை, பெஜவாடா,